

கரூர் மாவட்டம் மண்மங்கலம் வட்டம் வாங்கல் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், சமூக அளவிலான புற்று நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் முன்னோடி திட்டத்தினை தொடங்கி வைத்து கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி பார்வையிட்டார். அருகில் கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல், மருத்துவ பணிகள் இணை இயக்குனர் டாக்டர் செழியன், சுகாதார துணை இயக்குனர் டாக்டர் சுப்பிரமணியன் அருகில் உள்ளனர்.

மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வழங்கினார்

# பெரம்பலூரில் கலைஞர் பிறந்த நாள் விழா! நலத் திட்ட உதவிகள்!

## எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*பெரம்பலூர், ஜூன் 18-*

பெரம்பலூர் மாவட்ட பொறியாளர் அணி சார்பில் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, துறைமங்கலம் ரோவர் தனியார் முதியோர் காப்பகத்தில் உள்ளவர்களுக்கு, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில் புத்தாடைகள் வழங்கி, மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் தி.இராசா, பொறியாளர் அணி மாவட்ட தலைவர் பி. எஸ். வேல்முருகன், மாவட்ட துணைத்தலைவர் பி.செல்லச்சாமி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் கே.பெரியசாமி, ஜி.கே.மூர்த்தி, ஆர்.ரவிச்சந்திரன், ஆர். ராஜாராம், ஜி.ராஜசேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தஞ்சை மத்திய மாவட்டம்

# தஞ்சை தெற்கு ஒன்றியத்தில் அடங்கியுள்ள வல்லம் பேரூர் மாற்றியமைப்பு!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி, தஞ்சை மத்திய மாவட்டத்தில் ஏற்கனவே மறு சீரமைப்பு செய்து அறிவிக்கப்பட்ட தஞ்சை தெற்கு ஒன்றியத்தில் உள்ள **வல்லம் பேரூர்** தஞ்சை கிழக்கு ஒன்றியத்துடன் இணைக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 16.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## நாமக்கல் மேற்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகத் தேர்தலில், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.நடேசன் அவர்கள் திருச்செங்கோடு மேற்கு நகரக் கழக பொறுப்பாளராகவும் பொறுப்பு வகித்து வருகிறார். கழக சட்டதிட்ட விதிகளின்படி, ‘ஒருவருக்கு ஒரு பொறுப்பு’ என்ற அடிப்படையில், ஆர்.நடேசன் அவர்கள், தான் வகித்து வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்;

நாமக்கல் மேற்கு மாவட்டம், **தலைமைச் செயற்குழு உறுப்பினர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, ஜூன் 20 (வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 16.06.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# சேலம் கிழக்கு மாவட்ட சார்பு அணிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

*சேலம், ஜூன் 18-*

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேலம் கிழக்கு மாவட்ட கழக சார்பு அணிகள் கூட்டம் 20.06.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு சேலம் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கழகத்தின் துணை அமைப்புகளான அனைத்து அணிகளின் மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



பொருள்:

1. கழக உறுப்பினர் சேர்த்தல்,

2. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தண்டையார்பேட்டையில் ரூ.5.25 கோடி மதிப்பீட்டில்

# உதவி செவிலியர் பயிற்சி மாணவர்களுக்கான தங்கும் விடுதி - கட்டுமானப் பணி!

## மேயர் ஆர். பிரியா தொடங்கி வைத்தார்!

*சென்னை, ஜூன் 18-*

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-43, தண்டையார்பேட்டை சாலையில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் ரூ.5.25 கோடி மதிப்பீட்டில் மருத்துவ இணையியல் படிப்பு பயிலும் உதவி செவிலியர் (Auxiliary Nurse Midwife) பயிற்சி மாணவர்களுக்கான தங்கும் விடுதி கட்டுமானப் பணியினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று முன்தினம் (16.06.2025) அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இந்தக் கட்டடமானது, தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் 1,560 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது. இதில், தரைத்தளத்தில் முதல்வர் அறை, காப்பாளர் அலுவலகம், காப்பாளர் அறை, பெற்றோர் காத்திருப்பு அறை, சமையலறை, உணவுக் கூடம், கழிப்பறை உள்ளிட்ட 14 அறைகளும், முதல் தளத்தில் 10 எண்ணிக்கையிலான வகுப்பறைகள் மற்றும் 2 கழிப்பறைகள் அமைக்கப்படவுள்ளது.

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட - மாவட்ட துணை நிர்வாகிகள் நியமனம்!

## தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா அறிவிப்பு!

திமுக தகவல் தொழில்நுட்ப அணி மாவட்டம் மற்றும் மாவட்ட துணை, நிர்வாகிகள் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து செயல்படுவார்கள்.

**சென்னை வடக்கு மாவட்டம்**

சென்னை வடக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளராக **ஜி.பி.மோகன் பாபு** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**திருப்பூர் கிழக்கு மாவட்டம்**

திருப்பூர் கிழக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளராக **க.உ.செந்தில் குமார்** MBA அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக காங்கேயம் தொகுதி (களப்பணி) **சு.கதிரவன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்)**பா.தனசேகர்**அவர்கள்நியமிக்கப்படுகிறார்.

**திருப்பூர் தெற்கு மாவட்டம்**

திருப்பூர் தெற்கு மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக மடத்துக்குளம் தொகுதி (களப்பணி) **சி.மாரிச்சாமி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (மகளிர் பிரிவு) முனைவர் **தி.கிருஷ்ணவேணி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர், தகவல் தொழில்நுட்ப அணி தி.மு.க.

## தூத்துக்குடி வடக்கு மாவட்டம்

# கோவில்பட்டி வடக்கு, கோவில்பட்டி மேற்கு, கோவில்பட்டி மத்திய - விளாத்திகுளம் கிழக்கு, விளாத்திகுளம் தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் - ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்! மற்றும் கோவில்பட்டி கிழக்கு, கோவில்பட்டி மேற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் - நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் – அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் – தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் உள்ள கோவில்பட்டி நகரம் மற்றும் விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியம் இரண்டாக பிரிக்கப்படுகிறது. கோவில்பட்டி மத்திய மற்றும் மேற்கு ஆகிய இரண்டு ஒன்றியங்கள் மறுசீரமைக்கபட்டு மூன்றாக பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கபட்ட கழக அமைப்புகளுக்கு புதிய கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாகவும் – நகரங்கள் பின்வரும் வார்டுகளை கொண்டதாகவும் அமையும்.

**ஒன்றியங்கள்**

**கோவில்பட்டி வடக்கு ஒன்றியம் :** 1. ஆவல்நத்தம், 2. சத்திரப்பட்டி, 3.இடைசெவல், 4. இனாம்மணியாச்சி, 5. மூப்பன்பட்டி, 6.முடுக்குமீண்டான்பட்டி, 7. தோணுகால், 8. வில்லிசேரி ஆகிய 8 ஊராட்சிகள்.

**கோவில்பட்டி மேற்கு ஒன்றியம் :** 1. கிழவிப்பட்டி, 2. மந்திதோப்பு, 3.நாலாட்டின்புதூர், 4. பாண்டவர்மங்கலம், 5. ஊத்துபட்டி ஆகிய 5 ஊராட்சிகள்.

**கோவில்பட்டி மத்திய ஒன்றியம் :** 1. தீத்தாம்பட்டி, 2. துறையூர், 3.இலுப்பையூரணி, 4. கொடுக்காம்பாறை, 5. குலசேகரபுரம், 6.லிங்கம்பட்டி, 7. சிவந்திபட்டி, 8. திட்டங்குளம் ஆகிய 8 ஊராட்சிகள்.

**விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியம் :** 1. மந்திகுளம், 2. வேம்பார், 3.வேம்பார் தெற்கு, 4. பெரியசாமிபுரம், 5. குளத்தூர், 6. வைப்பார், 7. கீழவைப்பார், 8. எம். சண்முகபுரம் ஆகிய 8 ஊராட்சிகள்

**விளாத்திகுளம் தெற்கு ஒன்றியம் :** 1. அரியநாயகிபுரம், 2. தத்தநேரி, 3.எம். குமாரசக்கணாபுரம், 4. கே. தங்கம்மாள்புரம், 5. சூரங்குடி, 6.மேல்மாந்தை, 7. விருசம்பட்டி, 8. பூசனூர், 9. புளியங்குளம், 10.நெடுங்குளம், 11. வி.வேடப்பட்டி ஆகிய 11 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **கோவில்பட்டி வடக்கு, கோவில்பட்டி மேற்கு, கோவில்பட்டி மத்திய – விளாத்திகுளம் கிழக்கு, விளாத்திகுளம் தெற்கு,** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கோவில்பட்டி வடக்கு ஒன்றியம்: பொறுப்பாளர்: கு.ஜெயக்கண்ணன்**
**கோவில்பட்டி மேற்கு ஒன்றியம் : பொறுப்பாளர்: கி. ராதாகிருஷ்ணன்**
**கோவில்பட்டி மத்திய ஒன்றியம் : பொறுப்பாளர்: வீ. முருகேசன்**
**விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியம் : பொறுப்பாளர்: த. சின்னமாரிமுத்து**
**விளாத்திகுளம் தெற்கு ஒன்றியம் : பொறுப்பாளர்: இம்மானுவேல்**

**நகரங்கள்**

**கோவில்பட்டி கிழக்கு நகரம் :** 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 23, 24, 25, 26, 32, 33, 35, 36 ஆகிய 16 வார்டுகள்.

**கோவில்பட்டி மேற்கு நகரம் :** 1, 2, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 27, 28, 29, 30, 31, 34 ஆகிய 20 வார்டுகள்.

**நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **கோவில்பட்டி கிழக்கு, கோவில்பட்டி மேற்கு** ஆகிய நகரக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கோவில்பட்டி கிழக்கு நகரம் : பொறுப்பாளர்: மு. சுரேஷ்**
**கோவில்பட்டி மேற்கு நகரம் : பொறுப்பாளர்: கா.கருணாநிதி**

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க

## பாகநிலை முகவர்கள் (BLA-2 ), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA ) ஆலோசனைக் கூட்டம்!

**மாவட்ட கழக செயலாளர் நிவேதா.எம்.முருகன் எம்.எல்.ஏ.அறிவிப்பு!**



கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, **ஓரணியில் தமிழ்நாடு** முன்னெடுப்பின் கீழ் கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றிய, நகர கழகங்களில் வாக்குசாவடி வாரியாக பாகநிலை முகவர்கள் (BLA-2 ), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA ), மகளிர் அணி நிர்வாகிகள், தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம். மயிலாடுதுறை மாவட்ட கழக அவைத்தலைவர் K.G.சினிவாசன் அவர்கள் தலைமையில் மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் – மாநில இளைஞரணி துணை செயலாளர் திரு.**ந.இளையராஜா** ஆகியோர் முன்னிலையில் கீழ்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெற உள்ளது.

**மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதி**

| தேதி | நேரம் | ஒன்றியம்/ நகரம் | ஊராட்சி / வார்டு – பூத் | | இடம் |
|---|---|---|---|---|---|
| 17.06.2025 | காலை 10.00 மணி | மயிலாடுதுறை நகரம் | 19,20,21,<br>22,23,24,<br>25,26,27 | 139,141,142,190,192,193,<br>194,189,188,186,145,<br>185,183,175,176,177 | மயிலாடுதுறை விஜய் மஹால் தரங்கை சாலை. |
| 17.06.2025 | பிற்பகல் 12.00 மணி | மயிலாடுதுறை நகரம் | 10,11,12,13,<br>14,15,16,<br>17,18 | 124,159,162,154,157<br>160,156,152,153,146,<br>143,144,191,140 | சங்கர பாண்டிய நாடார் திருமண மண்டபம், திருமஞ்சனவீதி. |
| 18.06.2025 | காலை 10.00 மணி | மயிலாடுதுறை நகரம் | 1,2,3,4,5,<br>6,7,8,9 | 126,129,127,128,130<br>131,132,134,133,135<br>136,137,138,148,147<br>151,149,150,158,125,155 | ராஜேஸ்வரி திருமண மண்டபம் அய்யாரப்பர்வீதி |
| 18.06.2025 | பிற்பகல் 12.00 மணி | மயிலாடுதுறை நகரம் | 28,29,30,<br>31,32,33<br>34,35,36 | 161,164,167,168,163<br>165,166,170,171,169<br>172,173,174,178,181<br>182,179,180,184,187 | நாராயணி திருமண மண்டபம் திருஇந்தளூர் |
| 18.06.2025 | மாலை 5.00 மணி | மயிலாடுதுறை கிழக்கு | மன்னம்பந்தல்<br>பட்டமங்கலம்<br>மயிலாடுதுறை ரூரல்<br>நல்லத்துக்குடி<br>அகரகீரங்குடி<br>கோடங்குடி<br>செறுதியூர்<br>குளிச்சார் | 119,120,121,122,123,<br>247,248,249,250,251,252<br>253,254,256<br>255,257,258<br>259,260,<br>261,262<br>265,266 | அருண் திருமண மண்டபம் நல்லத்துகுடி |
| 19.06.2025 | காலை 10.00 மணி | மயிலாடுதுறை வடக்கு | திருச்சிற்றம்பலம்<br>முடிகண்டநல்லூர்<br>கடலங்குடி<br>பூதங்குடி<br>கேசிங்கன்<br>ஆத்தூர்<br>நமச்சிவாயப்புரம்<br>கிழாய்<br>தாழஞ்சேரி | 23,24,25,<br>21,22<br>26,27,28,29<br>30,<br>55,56<br>31,32<br>57,58<br>33,34,35,36<br>53,54 | நிலவர் திருமண மண்டபம் மணல்மேடு |
| 19.06.2025 | காலை 12.00 மணி | மயிலாடுதுறை வடக்கு | வரதம்பட்டு<br>கடக்கம்<br>சித்தமல்லி<br>குறிச்சி<br>கடுவங்குடி<br>பட்டவர்த்தி<br>இளந்தோப்பு<br>தலைஞாயிறு<br>சேத்தூர்<br>மேலாநல்லூர்<br>வில்லியநல்லூர் | 37,38,39,40,41,<br>10,<br>1,2<br>3,4,<br>7,<br>8,9,<br>5,6<br>42,43,44,45<br>46,47,<br>48,<br>49,50,51,52 | தனலெட்சுமி திருமண மண்டபம் நடராஜபுரம்,தலைஞாயிறு |
| 19.06.2025 | மாலை 4.00 மணி | மயிலாடுதுறை மேற்கு | மகாராஜபுரம்<br>மாப்படுகை<br>சோழம்பேட்டை | 101<br>195,196,197,198,199<br>200,201,202,203 | நாராயணி திருமண மஹால் மாப்படுகை |
| 19.06.2025 | மாலை 5.00 மணி | மயிலாடுதுறை மேற்கு | மூவலூர்<br>சித்தர்காடு<br>ஆணைமேலகரம்<br>மறையூர் | 238,239,240<br>241,242,243,244<br>235,236,237<br>245,246 | அய்யனார் கோயில் மூவலூர் |

மீதம் உள்ள ஒன்றிய, நகர,பேரூர் கழக கூட்டங்கள் பின்னர் அறிவிக்கப்படும்

இக்கூட்டத்திற்கு மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், அனைத்து சார்பணி நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூராட்சி மன்ற தலைவர்கள், பாகநிலை முகவர்கள் (BLA-2 ), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA )அனைவரும் அவரவர் ஒன்றிய நகரத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நிவேதா.எம்.முருகன் எம்.எல்.ஏ.**
மாவட்ட கழக செயலாளர்
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க